பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 29 புதன்கிழமை (12-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 165

### நல்லெண்ணத்தை காட்டும் வகையில்

# பொருளாதார தடையை நீக்குமாறு புதிய ஜனாதிபதியிடம் கோரிக்கை

## 5நாட்களில் முடிவு கூற உறுதி

கொழும்பு, மே 12

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதென்ற புதிய ஜனாதிபதியின் அக்கறையை உறுதி செய்யும் வகையில், அதற்கு முன்னோடியாக, நல்லெண்ணத்தை பிரதி பலிக்கும் வகையில்—

வடக்கு மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குமாறு அவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இக்கோரிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து நான்கு அல்லது ஐந்து நாட்களில் முடிவு கூறுவதாக ஜனாதிபதி திரு. டி. பி. விஜே துங்கா உறுதி அளித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட எம். பி. திரு. பரராஜசிங்கம் ஜோசப் நேற்றுக் காலை 10 30 மணிக்கு ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்காவைச் சந்தித்து தமிழர் பிரச்சினை குறித்துப் பேசினார்

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கான தமது முதலாவது உரையில் வடக்கு - கிழக்குப் பிரச்சினையை முடிவுக்குகொண்டு வர உறுதியளித்ததை திரு ஜோசப் அப்போது சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதியின் அந்த முடிவுக்கு முன்னோடியாக, நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் வடபகுதி மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அது குறித்து பாதுகாப்பு அமைச்சு அதிகா

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலின் பின்னர் அமைச்சரவை மாற்றம்

கொழும்பு, மே 12

மாகாண சபைத் தேர்தலின் பின்னர் அமைச்சரவை மாற்றி அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தகவலறிந்த அரசியல் வட்டாரங்களில் இவ்வாறு பேசப்படுவதாக 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

அமைச்சரவை மாற்றத்தின் போது ஜனாதிபதி விஜேதுங்கா தம்மிடம் தற்போது வைத்துள்ள அமைச்சுக்களில் சிலவற்றை புதிய அமைச்சர்களுக்கு வழங்குவார் என எதிர் பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது

(உ-எ)

## ஐந்து மாகாணங்களில் சு.க. அணி வெல்லுமாம்

கொழும்பு, மே. 12

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் குறைந்தது ஐந்து மாகாணங்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொது மக்கள் முன்னணி வெற்றியீட்டும் வாய்ப்பு இருக்கிறது.

சுதந்திரக் கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பேட்டி ஒன்றில் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார்.

தென் பகுதியில் சப்பிரகமுவா மாகாணத்தில் பொது மக்கள் முன்னணி வெற்றியீட்டும்.

வடமேற்கு மாகாணத்திலும் மேல் மாகாணத்திலும் பொது மக்கள் முன்னணிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையே தான் போட்டி இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

## ஐ.தே. கவில் இப்போது நான்கு கோஷ்டிகளாம்!

கொழும்பு, மே 12

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மறைவின் பின்னர் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் நான்கு கோஷ்டிகள் தோன்றியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸாவின் ஆதரவாளர்கள் திருமதி ஹேமா பிரேமதாஸா தலைமையில் ஒரு கோஷ்டியாக இயங்குகின்றனராம்.

ஏனைய மூன்று கோஷ்டிகளுக்கும் முறையே சிறிசேன கூரே, ரணில் விக்கிரமசிங்கா மற்றும் விஜேபால மெண்டிஸும் தலைமை வகிக்கின்றனர்.

இத்தகவலை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்கா வெளியிட்டார்.

(உ-எ)

### மாகாணசபைத் தேர்தலில்

## நவசமசமாஜக் கட்சிக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆதரவு

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் மாகாணசபைத் தேர்தலில் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான நவசமசமாஜக் கட்சிக்கு வாக்களிக்குமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். தமிழ் மக்களைக் கோரியுள்ளது.

நாட்டில் இனப்போர் நீடித்து வருவதற்கு ஆளும் கட்சியைப் போன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொறுப்பாகும் என்றும் —

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கம் இந்த இரு கட்சிகளுக்கும் கிடையாது என்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தெரிவித்துள்ளது.

(உ-6)

## இன்றும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 12

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்றும் வழமையான நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 12

முல்லைத்தீவுக் கோட்டத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் போராளியான கப்டன் அகிலன் (ஆறுமுகம் சிவஞானம் — அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை) வீரமரணமடைந்தார்

(உ-3)

## சிப்பாய் பலி

கொழும்பு, மே 12

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த மோதல் ஒன்றில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-3)

## தமிழர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மே 12

மன்னப்பிட்டி செருவில் இராணுவ முகாமில் உள்ள படையினர் செருவில் இராமத்தை கடந்த சனியன்று சுற்றிவளைத்தசமயம் இரு பிள்ளைகளின் தந்தையான இராசதுரை ஜீவரத்தினம் என்பவரைச் சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

## கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், மே 12

அரசு ஆதரவு தீவிரவாதக் குழு எனக் கருதப்படும் பச்சைப் புலிகளால் மன்னம்பிட்டியில் கடந்த சனியன்று அதிகாலை 4 மணியளவில் ஆசிரியரான செவ்வகுமார் பத்மநாதன் (வயது 28) என்பவர் கடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

### பூநகரிப் பாதை விவகாரம்:

## ஐ. நா. தூதரகப் பிரதிநிதி நேற்று டி. பியுடன் பேச்சு?

கேரதீவு — சங்குப்பிட்டி பாதையைத் திறப்பது தொடர்பாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரக இலங்கை வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பீற்றர் நிக்கொலஸ் நேற்று மாலை புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுடன் பேச்சு நடத்தவிருந்ததாக நேற்று மாலை இங்கு தகவல் கிடைத்தது.

கேரதீவு — சங்குப்பிட்டி பாதையைத் திறப்பது குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதற்காக பீற்றர் நிக்கலெஸ் இங்கு வருவதற்குத் திட்டமிட்டிருந்ததாகவும்—

ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டதை அடுத்து புதிய ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திய பின்னர் இங்குவர அவர் முடிவு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் பட்சத்தில் விரைவில் அவர் யாழ்ப்பாணம் வருவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## பிரேமாவைக் கொல்ல மற்றொருவர் காத்திருந்தார்?

ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொலை செய்வதற்கு தற்கொலைத் தாக்குதல் நபர் எடுத்த முயற்சி தவறியிருக்குமானால், அவ்வேலையைத் தொடர்ந்து நிறைவேற்ற மற்றொரு நபர் பின்னணியில் காத்திருந்திருக்கக் கூடும்.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொலை செய்த தற்கொலைத் தாக்குதல் நபர், ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலை நன்கு தெரிந்தவராக இருக்கவேண்டும் என்றும்—

ஜனாதிபதி வரும் வரை ஆமர் வீதிச் சந்தியில் அவர் காத்திருந்ததாக கருதப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-6]

## பிரேமா பலியான போது வீடியோ படம் எடுத்தனர்?

கொழும்பு, மே 12

ஜனாதிபதி பிரேமதாஸாவை தற்கொலைத் தாக்குதல் நபர் குண்டை வெடிக்க வைத்து படுகொலை செய்த போது அதனை மற்றொரு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் வீடியோ படம் எடுத்திருக்கக் கூடும்.

இவ்வாறு பொலீஸார் சந்தேகம் கிளப்பியிருப்பதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி தமது ஆதரவாளர்களுடன் உரையாடிக் கொண்டு செல்கையில் பத்திரிகையாளர் என்ற போர்வையில் புலிகள் உறுப்பினர் இவ்வாறு வீடியோப் படம் எடுத்திருக்கலாம் என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

[உ-6]

## விடுதியைக் காலிசெய்த தமிழ்இளைஞர்கள் யார்?

கொழும்பு, மே 12

ஜனாதிபதி பிரேமதாஸா கொலையுண்ட அடுத்த இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்களுக்குள் கொழும்பு விடுதிகள் சிலவற்றில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்கள் பலர் அந்த விடுதிகளைக் காலி செய்து கொண்டு வெளியேறினர்.

— இவ்வாறு பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்ததாக சிங்களப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

அந்த இளைஞர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலீஸார் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[உ-6]

### பிரேமாவின் இறுதிச் சடங்கில்

## தொண்டாவின் இரங்கலுரை கடைசி நேரத்தில் ரத்து!

கொழும்பு, மே 12

மறைந்த ஜனாதிபதி பிரேதாஸாவின் இறுதிச் சடங்கின் போது அமைச்சர் தொண்டமானும் இரங்கலுரை நிகழ்த்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது என்றும்—

முன்னைய அரசியல்வாதி ஒருவரின் கோரிக்கையைத் தொடர்ந்து தொண்டமான் இரங்கலுரை நிகழ்த்தவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தொண்டமான் இறுதிக்கிரியைகளின் போது இரங்கலுரை நிகழ்த்துவது இனவன் செயலை ஏற்படுத்தும் என அச்சம் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே அவர் இரங்கலுரை நிகழ்த்தவில்லை என கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளியன்று குமண வரும்

யாழ்ப்பாணம், மே 12

உணவு, மற்றும் அத்தியா வசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு "குமண" கப்பல் இன்று கொழும்பில் இருந்து புறப்படும் என நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது

இக்கப்பல் பெரும்பாலும் நாளை மறுதினம் பருத்தித் துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ் ஆஸ்பத்திரிகளுக்கு மருந்து வகைகளும், மற்றும் தபால் பொதிகளும் இக் கப்பலில் எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்து 'குமண' கப்பலில் வருகிறது

யாழ். போதனா வைத்திய சாலைக்கு மேலும் மூன்று மாதங்களுக்கு தேவையான மருந்து வகைகள் "குமண" கப்பலில் எடுத்துவரப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்பூசி மருந்து விசர்நாய்க் கடி தடுப்பூசி போன்றவையும் அவற்றில் அடங்கும்.

ஒருதொகுதி எக்ஸ்றே பிலிம்களும் கப்பலில் எடுத்து வரப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களாக வைத்தியசாலையில் எக்ஸ்றே பிலிம்களுக்கு தட்டுப்பாடு நிலவி வந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-17)


## கொக்குவில் இந்துக்கல்லூரி

### க. பொ. த. உயர்தரம் 1995

**விஞ்ஞானத்துறை**

பௌதிகவியலுக்குப் பதிலாக விவசாய விஞ்ஞானத்தினைப் பாடமாக எடுக்க விரும்பும் தகுதியுடைய மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**கலைத்துறை**

மனைப் பொருளியல் எடுக்க விரும்பும் மாணவிகள் தொடர்பு கொள்ளவும்

அதிபர்
கொக்குவில் இந்துக்கல்லூரி

(சி/5115)



## கண்ணீர் அஞ்சலி

### மனோன்மணி நடராசா

தாவடி தெற்கைச் சேர்ந்த வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் அலுவலகத்தில் எழுதுநராக கடமையாற்றும் திரு. செ. நடராசா அவர்களின் அன்பு மனைவியார் மனோன்மணி நடராசா 11 - 05 - 1993 திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் திடீர் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போமாக

சாந்தி சாந்தி சாந்தி

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

(25629)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
**24—03—1938**

மறைவு:
**24-05—1992**

சுதுமலையை பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்தவருமாகிய

உயர்திரு.
**கனகசபை பரராஜசிங்கம்**

திதி: 12—05—1993

அன்புடனும் பாசத்துடனும் வளர்த்து அயராது உழைத்து எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

என்றும் உங்கள் நினைவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமகன்,
பேர்த்தி, உறவினர்கள்.

19, ஒட்டுமடம் றோட்,
யாழ்ப்பாணம்.

(25627)


## இன்று

திருவள்ளுவர் மன்றத்தின் கருத்தரங்கும் - கலந்துரையாடல் நிகழ்ச்சியும் இன்று புதன்கிழமை மாலை 4 00மணிக்கு உரும்பராய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் 'வள்ளுவன் காட்டும் பேராண்மையும், பெண்மையும்'' என்னும் தலைப்பில் திருமதி கோகிலா மகேந்திரன் உரை நிகழ்த்துவார்.

o o o

யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறையின் சமூக விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் கருத்தரங்கு ஒன்று நடைபெறும். "இலங்கை அரசியலின் இன்றைய போக்கு" என்ற தலைப்பில் திரு. மு. திருநாவுக்கரசு கருத்துரை வழங்குவார்.

o 9 o

வலி. வடக்கு வளநிலையத்தின் தொழில் பயிற்சி நிலையத்தின் ஆரம்பவிழா இன்று பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறும். (உ-13)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், மே 12

கோண்டாவில் கிழக்கு அரசடி விநாயகர் தேவஸ்தானத்தின் மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு தினசரி இரவு 7 மணிக்கு சமயச் சொற்பொழிவு இடம்பெற்று வருகிறது,

திரு. ஆறு. திருமுருகன் "விநாயாகர் புராணம்" என்னும் தலைப்பில் எதிர்வரும் 15ஆம் திகதி வரை சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ)

o o o

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் கோவில் பஞ்சகுண்டயாக மகோற்சவம் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். மே 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு ரதோற்சவம் இடம்பெறும். (உ-152)

o o o

நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மே 20 ஆம் திகதி ரதோற்சவம் நடைபெறும். (உ-152)

## லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், மே 12

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் மார்ச் மாத சம்பளம் காசோலையாக இன்றுமுதல் சுன்னாகத்தில் உள்ள தற்காலிக பணிமனையில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உரும்பராயில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மே 12

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட 1993ஆம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மைப் போட்டியில் வலிகாமம் கோட்டத்தில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை இரவு 7. 45 மணிக்கு உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக இணைப்பாளர் திரு. க வேங்கையன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் வலிகாமம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. திருக்குமரன் மங்கள விளக்கேற்றி வைப்பார்.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வலிகாமம் கோட்ட தளபதி திரு இளங்குமரன் வழங்குவார். [ஒ]

## திருத்தம்

02-05-93 உதயனில் வெளிவந்த தம்பிமுத்து அல்பிறட் தங்கராசா என்பவருடைய மரண அறிவித்தலில் பேரப்பிள்ளைகளான எட்வின், வியோனி, அஸ்வினி ஆகியோரின் பெயர்கள் தவறுதலாக விடுபட்டுவிட்டன. அவற்றையும் சேர்த்து வாசிக்கவும்.

## காமினிக்கு வழங்கப்பட்ட ராணுவப் பாதுகாப்பு வாபஸ்

கொழும்பு, மே 12

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்காவுக்கு பாதுகாப்பு வழங்கி வந்த சிறிய இராணுவப் பிரிவு வாபஸ் வாங்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தை விலக்கி விட்டு, பொலீஸ் பாதுகாப்பு காமினிக்கு வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவப் பாதுகாப்பு விலக்கப்பட்டது பற்றி காமினி திஸநாயக்கா பொலீஸ் மா அதிபருக்கு முறையிட்டார். அதன் பின்னரே அவருக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## வேட்பாளர் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வழங்க மறுப்பு

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர்களுக்கு ஆயுதங்களைத் தற்பாதுகாப்புக்கு வழங்குவதில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

ஜனநாயக ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

எனினும் முன்னணியின் தலைவர்களுக்கும் அவர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கும் பாதுகாப்பு வழங்க அரசு இணங்கியுள்ளதாக முன்னணியின் பிரமுகர் டாக்டர் விக்கிரம வீரசூரியா தெரிவித்தார். (உ-எ)

## பம்பலப்பிட்டி விடுதியில் சனி அதிகாலை கொள்ளை

### நகைகள், பணம் அபகரிப்பு

பம்பலப்பிட்டி விடுதி ஒன்றில் தங்கியிருந்தோரை சிவில் உடையில் சென்ற 5 பேர் கொண்ட குழு ஒன்று மிரட்டி 6லட்சம் ரூபா பெறுமதியான பணம்] [மற்றும் தங்கநகைகளை அபகரித்துச் சென்றதாக முறையிடப்பட்டிருக்கிறது.

பொலீஸில் இருந்து வந்திருப்பதாக அக் கோஷ்டி மிரட்டியே கொள்ளையிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை இச் சம்பவம் இடம் பெற்றது. (ஒ-எ)

## ஜாதகப்படி ஹேமா அரசியலில் ஈடுபடுவார்!

கொழும்பு, மே 12

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவியாவ ஹேமாவின் ஜாதகப்படி அவர் அரசியலில் பிரவேசிப்பார் என்று ஆருடம் கூறப்படுகிறது.

பிரேமதாஸா குடும்பத்தின் நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இதே வேளை —

அப்பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில்—

"எனது கணவரின் ஜாதக நிலை சரியானதாக இல்லை. இது அவருக்கும் தெரிந்திருந்தது. இதனை நான் அவருக்கு நினைவு படுத்தி வந்தேன். வீதியில் இறங்கவேண்டாம் என்று அவருக்கு நான் கூறி இருந்தேன். தனது ஜாதக பலன் நன்றாக இல்லை என்று தெரிந்து இருந்தும் அவர் ஏன் இப்படி நடந்து கொண்டார்.?" — என்று ஹேமா கேள்வி எழுப்பினார்.

கூடாத காலம் பற்றி கணவரை எச்சரித்துவிட்டு மேதினமன்று தாம் கண்டிக்கு சென்றதாகவும் அவர் சொன்னார். (உ எ)

## நாய்களுக்கு தடுப்பூசி

மானிப்பாய், மே. 12

ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதிகளில் இன்றும், நாளையும் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய் தடுப்பூசி போடப்படவுள்ளது.

இன்று புதன் காலை 8.30 மணிக்கு கூழாவடி உப தபாற்கந்தோருக்கு அருகிலும், பின்னர் 10 30மணிக்கு மூன்றாம் கட்டையடியிலும்—

நாளை வியாழன் காலை 8 30 மணிக்கு நவாலி அரசடிச் சந்தியிலும், பின்னர் 10 30 மணிக்கு நவாலி முருகமூர்த்தி கோயிலடியிலும் தடுப்பூசி போடப்படும். (ஒ-90)

## சாரணர் பவளவிழா

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சாரணர் குழுவின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் இன்று காலை 9 மணி முதல் கல்லூரியில் நடைபெறும்.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ஆர், சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இன்று காலை குருளையர் தின நிகழ்வும் பிற்பகலில் சாரணர் தின நிகழ்வுகளும் இடம் பெறும்.

## ஊட்டச் சத்துக் கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக சுகாதார நிலையம் நடத்தும் கருத்தரங்குத் தொடரில் நாளை வியாழன் பிற்பகல் 4-00 மணிக்கு இரண்டாவது கருத்தரங்கு நடைபெற உள்ளது.

"ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் எமது மக்களுக்கு ஏற்படக் கூடிய பிரச்சினைகளும் அதற்குரிய சில ஆலோசனைகளும்" என்ற தலைப்பில் கருத்தரங்கில் கருத்துக்கள் பரிமாறப்படும்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் இக்கருத்தரங்கிற்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சீர்மாறன் தலைமை வகிப்பார்.

"இன்று எமது சமூகத்தில் நிலவும் ஊட்டச்சத்துணவுக் குறைபாட்டை தீர்ப்பதில் யாழ். பல்கலைக்கழக (மாணவ - ஆசிரிய) சமூகத்தின் பங்கு" என்ற தலைப்பில் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியமும் —

"இன்றைய ஊட்டச்சத்துணவுக் குறைபாட்டினால் குழந்தைகளிலும், மாணவர்களிலும் ஏற்படும் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி திருமதி வி. எம். கருணாகரனும் —

"இன்றைய சூழ்நிலையில் ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் பிரச்சினைகளைச் குறைப்பதற்கு நாம் என்ன செய்யலாம்" என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரனும்—

"இன்று நிலவும் ஊட்டச்சத்துணவுக் குறைபாட்டினால் உள்ளூர் உற்பத்திகளின் பயன்பாடு" என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி என் சிவராசாவும் —

"ஊட்டச் சத்துணவுக் குறைபாட்டினால் மக்களிடையே ஏற்படக்கூடிய உடனடியான நீண்டகால பிரச்சினைகளும் அவற்றைத் தவிர்ப்பதற்ச் சில ஆலோசனைகளும்" என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி எஸ். ஆனந்தராஜாவும் உரை நிகழ்த்துவார்கள். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண சபைத் தேர்தல்கள் திங்கட்கிழமை:

# மேலும் அவதானிகள் பலர் இன்றுகொழும்புவந்துசேர்வர்

## நேற்று ஜனாதிபதியுடன் பேச்சு

கொழும்பு, மே 12

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களைச் கண்காணிக்கவென வெளிநாடுகளில் இருந்து 25 அவதானிகள் கொழும்பு வந்துசேர்ந்துள்ளனர்.

மேலும் சிலர் இன்று கொழும்பு வந்து சேர்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு வந்துள்ள 8நாடுகளைச் சேர்ந்த 25 அவதானிகள் நேற்று ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவைச் சந்தித்துப் பேசினார்கள்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வாவும் அச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

இம் மாதம் 22ஆம் திகதி அவதானிகள் தத்தமது நாடுகளுக்குத் திரும்புவார்கள்: அதற்கு முன்னர் இவர்கள் செய்தியாளர்கள் மாநாடு ஒன்றை நடத்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு வந்துள்ள அவதானிப்பாளர்கள் தற்சமயம் ஹோட்டல் ஒப்ரோயில் தங்கி இருக்கின்றனர்.

தேர்தல் பிரசாரங்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் முடிவடையும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே (ஒ-எ)

பிரேமா கொலையுண்ட குண்டு வெடிப்பு:

## இரு சடலங்கள் அடையாளம் காணப்படவில்லையாம்

மே தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் ஜனாதிபதி பிரேமாவுடன் உயிரிழந்த 24 பேரின் சடலங்களில் இருவரின் சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இச்சடலங்கள் கொலையாளிக்கு உடந்தையாக செயற்பட்டவர்களினுடையவனவாக இருக்கலாம் என்று குற்றப்புலனாய்வுப் பொலிஸார் சந்தேகிப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (ஒ-எ)

## செஞ்சிலுவை உப தலைவராக தெரிவு

யாழ்ப்பாணம், மே 12

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் புதிய உப தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு கு. பாலகிருஷ்ணன் கடந்த 10ஆம் திகதி முதல் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

திரு. பாலகிருஷ்ணன் யாழ். செயலகத்தில் பணிபுரிகிறார். (ஓ)

## கொழும்பில் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 12

எழுதுவினைஞர் சேவையின் அதிசிறப்பு (சுப்றா) வகுப்பு விசேட பரீட்சையும், வினைத்திறமைகாண் (ஈ. பீ) பரீட்சையும் திட்டமிட்டபடி எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பில் மட்டும் நடைபெறும்.

கொழும்பு சென்றிருக்கும் யாழ். அரச அதிபர் அங்கிருந்து யாழ். செயலகத்துக்கு இத்தகவலை அறிவித்துள்ளார். (ஓ-3)

## அதிபர்கள் பரீட்சை

கொழும்பு, மே. 12

பாடசாலை அதிபர்களுக்கான தகுதிகாண் பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் 24 ஆம் திகதி நடத்தப்படவிருக்கிறது.

சம்பள உயர்வு மற்றும் பதவி உயர்வு ஆகியனவற்றை வழங்குவதற்காக இத் தகுதிகாண் பரீட்சை நடத்தப்படுகிறது.

## பெண் மரணம்

தென்மராட்சி, மே 12

கடந்த 25ஆம் திகதி வீதியைக் கடக்க முயன்றபோது விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் கடந்த வெள்ளிக்கிழமை மரணமானார்.

புலோப்பளையில் இடம்பெற்ற இந்த விபத்தில் சிக்கிய இ செபமாலை (வயது 52) என்பவரே மரணமானவர் ஆவார் (இ 117)

## சி. ஐ. டி. பிரிவின் புதிய பணிப்பாளர் செனவிரத்ன

கொழும்பு, மே 12

இரகசியப் பொலீஸ் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக சிரேஷ்ட பொலீஸ் அதிபர் புஞ்சிபண்டா செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளாக இத் திணைக்களத்தில் பணியாற்றிவரும் இவர், 35 ஆண்டுகளுக்கு முன் பொலீஸ் சேவையில் சேர்ந்தார். (ஓ-எ)

## களுத்துறை சிறையிலிருந்து 6 தமிழ் இளைஞர் விடுதலை

களுத்துறைச் சிறையில் இருந்து ஆறு தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பலர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் களுத்துறைச் சிறைக்கு மாற்றப்பட்டதும்—

அவர்களில் சிலர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்ததும் தெரிந்தவையே. (ஒ-எ)

## அமிர் கொலை வழக்கு; இன்று நீதிமன்றம் தீர்ப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் கொலை வழக்கில் இன்று புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் என்று அறிவிக்கப்படுகின்றது.

அலோசியஸ், விசு, அருள் ஆகியோருடன் சேர்ந்து கொலைச்சதியில் ஈடுபட்டதாக வின்சென்ட் வில்லியம் மரியதாஸ் என்பவர் மீது இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது (ஒ-எ)

---

உ

உடுப்பிட்டி வல்லைவாளி

## சித்திவிநாயகர் ஆலய

முன்றிலில்

02 — 05 — 1993 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம்
12 — 05 — 1993 வரை

கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவு ஆற்றிய

செந்தமிழ்ச் செல்வன் கம்பவாரிதி

திரு. இ. ஜெயராஜ் அவர்கள்

இன்று 12 05 93 புதன்கிழமை இரவு 7மணியளவில்

சைவப் புலவர் கை. நமசிவாயக் குருக்கள்

[illegible] தலைமையில்

பொன்னாடை போர்த்தி, தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்படுவார்

என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றியுரை: புலவர் மணி திரு கா. நீலகண்ட ஆசிரியர்

இவ் விழாவினை, அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

— விழா அமைப்பாளர்.

(25615)

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னையின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 09 | 09 |
| — | — |
| 11 | 05 |
| — | — |
| 1920 | 1988 |

### அமரர் நாகலிங்கம் பாலகிருஸ்ணர்

(பத்தர்)

திதி: 12 — 05 — 1993

''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்புபா ராட்டும் உலகு''

அன்புத் தெய்வமே ஐயா! நீங்கள் காட்டிய பாதையில் சென்று மங்காத உங்கள் பெருமை காத்திடுவோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மணியகாரன் வீதி,
தெல்லிப்பழை.

(25614)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 16 | 13 |
| — | — |
| 01 | 04 |
| — | — |
| 1919 | 1993 |

அமரர்

### சோமசுந்தரம் வன்னியசிங்கம்

B. Com. (Lon ) M. Sc. Econ. (Lond.)

(இளைப்பாறிய விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

எங்கள் குலதெய்வத்தின் மரணச் சடங்குகளில் கலந்து கொண்டும், பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று 12 - 05 - 1993 இல் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதன் பின்பு நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் படியும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி பாரததேவி வன்னியசிங்கம்.

வைரவர் கடாட்சம்,
பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(6168)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 | 24 |
| — | — |
| 03 | 04 |
| — | — |
| 1938 | 1992 |

திதி: 12-05-1993

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், ''அருள் நிலை'' வேலணை மேற்கை வாழ்விடமாகவும் கொண்டு வாழ்ந்து மறைந்த

### அமரர் செல்லத்துரை தேவராஜா

(இளைப்பாறிய தபாலதிபர்)

குடும்பத்தின் ஒளிவிளக்கே! எங்கள் வாழ்வின் துணைத் தெய்வமே! உங்களைப் பிரிந்து ஓராண்டு நினைவு நாளாம் இன்று. உங்கள் நினைவே எங்களை வழி நடத்தும் என்ற நம்பிக்கையுடன் உங்கள் பாதங்களில் மலர் தூவித் துதிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்;

உங்கள் குடும்பத்தினர்.

122, இராசாவின் தோட்டம் வீதி,
நல்லூர்.

(25621)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வர்ண, கறுப்பு, வெள்ளை படச்சுருள்கள், கறுப்பு வெள்ளை படப் பிரதியாக்கத்திற்கான பிரதித்தாள்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளுங்கள். K. S. R. Photos, 766, K. K. S Road, Thaddatheru Junction. (25607)

நல்ல இன பொமனேரியன் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25619)

சுகாதார முறைப்படி வறுத்துத் திருத்த தரமான சன்பிறாண்ட் மிளகாய்த் தூள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (25332)

## தேவை

மூங்கில் தடி மொத்தமாகவும், சில்லறையாகவும் தேவை. தொடர்பு: அண்ணா தொழிற்சாலை, இணுவில். (சி-4990)

## இலவச திருமண சேவை

30 வயது, றோமன்கத்தோலிக்க, பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் தேவை. சீதனம் உண்டு உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (25604)

37 வயது, ஆயிலியம், சுவிஸில் வேலை புரிபவருக்கு மணப்பெண் தேவை இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். பொருத்தமான மணமக்களுக்கு நாடுங்கள்: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (25606)

## பெயர் மாற்றம்

யாழ். நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் கணேசலிங்கம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K. V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25537)

## மணமகன் தேவை

இந்து, 26 வயது, உத்தராடம், 4இல் செவ்வாய், தமிழ், ஆங்கிலம், சிங்களம் கற்ற ஆசிரியைக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். சீதனம் கொடுக்கப்படும். சகல விவரங்களுடனும் எழுதவும். இல 525 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (25613)

32, செவ்வாய்க் குற்றமற்ற இந்து ஆசிரியைக்கு கௌரவமான மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். உத்தியோகமற்றவரும்கூட விண்ணப்பிக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (25624)

## மணமகள் தேவை

B. Sc Second Class Honours யாழ் பல்கலைக்கழக பட்டதாரி தற்பொழுது Melbourne பல்கலைக்கழகத்தில் Graduate Course in Accountancy பயிலும் மகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். வயது 29, உயரம் 5' 7'', நட்சத்திரம் திருவோணம். குறிப்புடன் விண்ணப்பிக்கவும்: இல 524, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (25608)

## தவறிவிட்டது

உடுவிலிலிருந்து வயல்வெளிப் பாதையால் மல்லாகம் செல்லும் பொழுது ஏழாலையைச் சேர்ந்த பாமினி என்பவரின் அப்பியாசக்கொப்பி, பாடத்திட்ட புத்தகம், அடையாள அட்டை, பரீட்சை அனுமதிப் பத்திரம் தவறிவிட்டன. எதிர்வரும் 16ஆம் திகதி பரீட்சைக்கு தோற்ற இருப்பதால தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்: அலோமாஸ், சுப்பிரமணியம் றோட், சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவு.. (5918)

**MATHS CENTRE**
**NELLIADY**

O/L பகல் நேர வகுப்பு

விசேட

**கணித, விஞ்ஞான வகுப்புகள்**

ஆரம்பம்: 13-05-93 9.00 Am.

விபரங்கட்கு தொடர்பு கொள்க. (6167)

**M. Sc. IN BIOTECHNOLOGY**

"Graduates in Chemical, Biologial, Medical, Dental, Veterinary, Agricultural and Engineering Sciences will be considered. Forward application with biodata. All applicants will be required to sit for a qualifing Examination and a viva. Address correspondence to Registrar, University of Jaffna.

Closing date: 1993 05 - 31

- REGISTRAR.
University of Jaffna.
1993 - 05 - 10
(C-5114)

# அறிவித்தல்

## வ. இ. ச சபை அறிமுறைப் பரீட்சை - 1993

நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக 1993 - 05 - 15, 1993 - 05 - 16 ஆகிய இரு தினங்களில் நடைபெறவிருந்த மேற்படி சபையின் அறிமுறைப் பரீட்சை மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது என்பதை தேர்வு நாடிகளுக்கு அறியத்தருகிறேன்.

இ சுந்தரலிங்கம்.
யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்,
வ. இ. ச. சபைத் தலைவரும்.
(சி/5095)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 25 04 1925



மறைவு: 09 05 1992

அமரர்
## அம்பலவாணர் சிவசுப்பிரமணியம்

நினைவெல்லாம் கனவாக
நெஞ்சுநிறை ஆசையுடன்
கனவுபோல் மறைந்தெம்மை
கலங்கவிட்டீர்களே!

அன்புடனும், பண்புடனும் எம்மை வளர்த்து ஆளாக்கிய எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், நாங்கள் உங்களை விட்டுப் பிரியாமல் என்றும் உங்கள் நினைவாக வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்: திருமதி ம. சிவசுப்பிரமணியம்
42, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம். (6166)

# பதவி வெற்றிடம்

பதவி: சங்கீத ஆசிரியர்
தகைமை: பல்கலைக்கழகப் பட்டம் (சங்கீதம்)
வேதனம்: கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படும்.
விண்ணப்ப இறுதித்திகதி: 31 - 05 - 1993
விண்ணப்ப விலாசம்: அதிபர், நவீல்ட் பாடசாலை, கைதடி.
(சி-5110)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 30 01 1910



மறைவு: 22 04 1992

அமரர்
## சரவணமுத்து பரமனாதி (R. S. P.)
(நயினாதீவு)

திதி: 12 - 05 - 1993

அன்புடனும், பாசத்துடனும் வளர்த்து, அயராது உழைத்து எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (25616)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 09 - 09 - 1919



உதிர்வு: 12 - 04 - 1993

அமரர்
## கந்தையா தம்பிப்பிள்ளை (J. P.)

அன்புமிகு கணவராய், பாசமிகு தந்தையுமாய், நேசமிகு பேரனுமாய் நேர்த்தியுடன் வாழ்ந்தீர்கள்! கவலையில்லா மனிதராய்க் களிப்புடன் வாழ்ந்து நீங்கள் சோகத்தில் எம்மை ஆழ்த்திச் சொல்லாமல் மறைந்தீர்கள் நீங்கள் என்றென்றும் எங்களுடன் தான் இருப்பீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

12 - 04 - 93 அன்று நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டும், அனுதாபச்செய்திகள் அனுப்பி வைத்தும், எமது ஆறாத்துயரில் கலந்து கொண்டும், பல வழிகளிலும் உதவி செய்த நண்பர்கள், பெரியார்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (12 - 05 - 93) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

"இராசேஸ்வரி பவனம்"
கைதடி. [6169]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மீண்டும் ஜே. ஆர்! (3)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, அரசமைப்பை மீறிச் செயற்பட்டுவிடக் கூடாது என்பது ஜே. ஆர். புதிய ஜனாதிபதிக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கையில் அரைப் பங்கு. தான் இயற்றிய அரசமைப்பில் அப்படி என்ன அரிதான பொக்கிசங்களைப் புதைத்து வைத்திருக்கிறார் அவர்?

1978 அரசமைப்பு ஒற்றையாட்சி அரசு முறையையே கொண்டிருக்கிறது. அதற்குக் கொண்டு வரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தில் இலங்கை-இந்திய ஒப்பந்தம் — மாகாண சபைகள் சட்டம் — உள்ளடக்கப்பட்டுள்ளது. அவை இரண்டும் வடக்கில் மட்டுமன்றித் தெற்கிலும் பேரழிவுகளுக்கும் அரசியல் சீரழிவுகளுக்கும் வித்திட்டவை.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் வலுவற்றது என்பதை தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்களும் அனுபவரீதியாகக் கண்டுவிட்டனர். தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை ஓரளவேனும் நியாயமான முறையில் பூர்த்தி செய்யும் தன்மை ஒரு கிராம் தானும் அதில் இல்லை.

இதனை இந்தியா கூட உணர்ந்திருக்கிறது. இந்திய அரசியல் ஆய்வாளர்கள் பலர் இதனைத் தெளிவுபட எடுத்துக் கூறியுள்ளனர். இந்திய அரசின் பின்புலப் பலத்துடன், துணையுடன் பதவி வகித்த முதலமைச்சர் வரதராஜப் பெருமாளே, மாகாண சபை தமிழருக்கு "கவ்வைக் குதவாதது" என்று கருதி தமிழீழ அறிவிப்புச் செய்தார். இலங்கை - இந்திய ஒப்பந்தம், அதன் பெறுபேறான மாகாண சபைத் திட்டம் என்பன தோல்வி கண்டதை அந்நிகழ்வு இந்தியாவுக்கு நிதர்சனமாக உணர்த்தியது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை சகல தரப்பினரும் ஏற்றுக்கொண்டதாகவும் ஜே. ஆர். "கதைவிட்டிருக்கிறார்!" சிங்கள அரசின் தரப்பில் ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டாரே அன்றிச் சிங்கள மக்கள் ஏற்றுக்கொண்டார்களா? ராஜீவின் தோளில் துப்பாக்கியால் அடித்த கடற்படைச் சிப்பாய் சிங்கள மக்களின் ஒப்புதலையா பிரதிபலித்தார்? ஜே. வி. பியின் கிளர்ச்சியும் அதனால் ஏற்பட்ட பேரழிவும் எதனால் உண்டானவை?

தமிழர் தரப்பில் ஒப்பந்தத்தில் எவருமே கைச்சாத்திடவில்லை. அவ்வாறிருக்கத் தமிழர்கள் ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் தெரிவித்திருந்தார்கள் என்று எதனைக் கொண்டு ஜே. ஆர். உளறுகிறார்? தமிழர் தரப்பு ஏற்றிருந்தால் இந்தியப்படை தமிழர்களை அழித்திருக்க வேண்டிய அவசியம் ஏன் உண்டானது? அமைதிப் படையாகத் தமிழ் மண்ணில் காலடி வைத்து அடக்குமுறை இராணுவமாக அது சுயரூபத்தைக்காட்ட நேர்ந்தது ஏன்?

எனவே சிங்களவர்களும் சரி, தமிழர்களும் சரி நிராகரித்த ஒப்பந்தத்தை, மறந்துபோன ஒப்பந்தத்தை, கிடப்பில் போட்ட காகிதத்தை ஜே. ஆர். மீண்டும் கையில் எடுக்க முனைவது நாட்டை இன்னும் பல வருடங்கள் சீரழிவுச் சிதைக்கே இட்டுச் செல்லும். ஒப்பந்தம் மறக்கப்பட்ட கடந்த 52 மாதங்களிலும் ஏற்பட்ட அழிவுகள், சிதைவுகளைவிட ஐம்பது மடங்கு அதிகமான பேரழிவுகளை உண்டாக்கும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மட்டுமன்றி, ஒற்றையாட்சி அரசமைப்பும் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க உதவாது என்பதனை அவர் உணர வேண்டும். தமிழர்கள் தன்னாட்சித் தனியரசு ஒன்றை, இலங்கையில் இரண்டாவது அரசு ஒன்றை நிறுவுவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள். சிங்களவர்கள் அதற்கு இணங்காவிட்டால் இலங்கை, ஸ்ரீலங்கா தமிழீழம் என்ற இரண்டு நாடுகளாக மாறும் என்பதை ஜே ஆர். மட்டுமன்ன ஏனைய பௌத்த-சிங்கள பேரினவாதத் தலைவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

# அரசு அழைப்பினும் அரசியல் பொறுப்பு எதனையும் நான் ஏற்கப்போவதில்லை

கொழும்பு, மே 12

"தற்போதைய அரசாங்கம் என்னை அழைத்தாலும் நான் அரசியல் பொறுப்புகள் எவற்றையும் ஏற்கப் போவதில்லை.

"எனினும் —

"அரசாங்கம் கோரும் பட்சத்தில் நான் ஆலோசனை வழங்கத் தயாராக இருக்கின்றேன்."

86 வயதான முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா "சண்டே ரைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

### ஐ. தே. க. உறுப்பினரல்லன்

"நான் ஓய்வு பெற்றுவிட்டேன். இப்போது நான் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினராகக் கூட இல்லை. ஓர் அரசியல்வாதி என்றால் அவன், டேர்பிகுதிரைப் பந்தயத்தில் ஓடும் குதிரை போல இருக்க வேண்டும்." — என்றும் அவர் சொன்னார்.

"1988 இல் மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்படி ஐக்கியதேசியக் கட்சி என்னை கேட்டது. மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவும் என்னை வற்புறுத்தினார். ஆனால் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் உடல்நிலை எனக்கில்லை. வெளிப்பார்வைக்குத் தெரியாவிட்டாலும் எனக்கு உடல் பலவீனங்கள் உண்டு.

### டி. பிக்கு ஆதரவு

"திரு. விஜேதுங்கா பிரதமராக இருந்தபடியால் அவர் தான் ஜனாதிபதியாக வேண்டும். ஜனாதிபதி பதவிக்கு டி. பி. விஜேதுங்காவை விட சிறந்தவர் இன்றில்லை. திரு. விஜேதுங்காவுக்கு ஆதரவாக நான் நிற்பேன். — என்றார்.

பேட்டியின் மற்றும் முக்கிய பகுதி வருமாறு:-

கேள்வி:- டி. பி. விஜேதுங்க எதிர்மறை ஆளுமை உடையவர் என்று சிலர் கூறுகிறார்

## ஜனாதிபதி பதவிக்கு டி. பியை விட சிறந்தவர் எவரும் இன்றில்லை

களே?

ஜே. ஆர்:- சிலர் அப்படிக் கூறலாம். அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டு தடவைகள் பதவி வகித்த ஹரிட்ருமனைப் பற்றியும் இப்படித்தான் கூறினார்கள் ட்ருமனைப் பார்த்து



தையல்காரனின் மகன் என்று கூறி மக்கள் நகைத்தனர். ஆனால் தாம் ஒரு திறமைசாலி என்பதை ட்ருமன் நிரூபித்தார். ட்ருமன் அணுக்குண்டையே போட்டார். ஆனால் திரு. விஜேதுங்காவிடம் சந்தர்ப்பவசமாக அணுகுண்டு இல்லை.

கேள்வி:- இத்தகைய துக்ககரமான கட்டத்தில் ஸ்ரீலங்காவின் நிலைமை எப்படியிருக்கும் எனக் கருதுகிறீர்கள்?

ஜே. ஆர்: எமது 2 ஆயிரத்து 400 வருடகால சரித்திரத்தில் மிகப்பெரிய பேரழிவுகளை சந்தித்துத் தப்பியுள்ளோம். பிரேமதாசா, அத்துலத் முதலி ஆகிய முக்கிய பிரமுகர்கள் இருவர் கொல்லப்பட்டமை குறித்து நாம் பெரிதுபடுத்துகின்றோம்; தினமும் 2, 3 பேர் கொல்லப்படுகிறார்கள்; 2, 3 பேர் தற்கொலை செய்து கொள்ளுகின்றார்கள்; ஒரு கோடி 70 லட்சம் பேரில் ஒரு சதவீதத்துக்குக் குறைவானோரே வன்செயல் விரும்பிகள். ஆனால் நாம் வன்செயலில் ஈடுபடாதோரைப் பற்றியே அதிகம் பேசுகிறோம்.

### 1978 இன் அரசமைப்பு சட்டம்

கேள்வி: நீங்கள் தயாரித்த

முகப்படுத்தப்பட்டது.

பிரதம மந்திரி முறை அமுலில் இருக்கும் இத்தாலியையும், இந்தியாவையும் பாருங்கள். நரசிம்மராவினால் தனது நாட்டுக்கு வெளியே செல்ல முடியவில்லை.

என்றாலும் எமது ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு ஆண்டுகளிலிருந்து நான்கு ஆண்டுகளாகக் குறைத்திருக்க முடியும் அப்படியானால் நாங்கள் இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை கண்டிருப்போம்.

### தேசிய அரசு

கேள்வி; இந்தக் கட்டத்தில் தேசிய அரசு அமைப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

ஜே. ஆர்: தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து ஜனாதிபதி தனது அதிகாரத்தை ஸ்திரப்படுத்திய பின்னரே நடவடிக்கை எடுக்கமுடியும் தேசிய அரசு ஒன்றை

## ஜே. ஆர். பேட்டி

1978 அரசமைப்புப் பற்றி...?

ஜே. ஆர்: அது வேலை செய்கிறது. இப்போது நாடாளுமன்றம் ஜனாதிபதியைத் தெரிவு செய்கிறது. எந்த அரசமைப்பும் முழு ஒழுங்கானது அல்ல. ஏதேனும் இடர்ப்பாடுகள் இருந்தால் நாடாளுமன்றம் அரசமைப்பைத் திருத்தவேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை அமெரிக்காவில் நன்கு செயற்படுகிறது.

பிரான்ஸில் பிரதம மந்திரிகள் அடிக்கடி மாற்றப்பட்டனர். அங்கு ஸ்திரமான அரசைக் கொண்டு வருவதற்காக ஜனாதிபதி முறை அறி

அமைப்பதற்கு தற்போதைய நிலைவரம் பொருத்தமானதா என்பது பற்றி எனக்குத் தெரியாது.

கேள்வி: ஐ. தே. கவில் பிளவு இருப்பதாக சிலர் கூறுகிறார்களே. உங்கள் கருத்து என்ன?

ஜே ஆர்: ஐக்கிய தேசியக் கட்சியில் பிளவு எதனையும் நான் காணவில்லை. லலித்தும் காமினியும் வெளியேறி புதிய கட்சி தொடங்கினார்கள். யு என். பியை விட்டு விலகியே எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா அன்று புதிய கட்சி துவக்கினார்.

(உ-எ)

# கொழும்பு அரசியலை புலிகள் தீர்மானிப்பதாக அர்த்தம்

## பிரேமா, லலித் கொலைகள் குறித்து ஐ.தே.கவின் நிலைப்பாட்டால்

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர் திரு. ஜயதேவா உயங்கொட "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையில் "இரண்டு கொலைகளின் பின்னணி அரசியல்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். திரு உயங்கொட 1971 இல் ஜே. வி. பி. அரசியல் குழு உறுப்பினராக இருந்தார். அவரது கட்டுரையின் முக்கிய பகுதியை இங்கே படிக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா மற்றும் லலித் அத்துலத்முதலி ஆகியோரின் படுகொலைகளுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை ஏற்பதானால், அது தொடர்ச்சியான பல அரசியல் சிக்கல்களை ஏற்படுத்தும்.

இந்த நிலைப்பாட்டை வற்புறுத்தும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு, இதன் உண்மையான அர்த்தம் பெரும்பாலும் தெரியாதிருக்கிறது

"உண்மையில் கொழும்பு அரசியலை விடுதலைப் புலிகளின் அரசியலே தீர்மானிக்கிறது என்பதே அர்த்தமாகிறது.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால்—

கொழும்பு அரசியலை விடுதலைப் புலிகளே தீர்மானிக்கின்றனர். அரசு தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் உள்ள கொழும்பு அரசியல் வாதிகள், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனால் தந்திரமான முறையில் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் நிகழ்ச்சி அட்டவணைப்படியே நடந்து கொள்கின்றார்கள் என்று அர்த்தமாகிறது.

இக்கொலைகளில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்ற நிலைப்பாடு—

தெற்கில் அமைதி அல்லது குழப்பம் என்பது வடக்கில் இடம்பெறும் யுத்தம் அல்லது சமாதானத்துடன் பிரிக்கமுடியாத அளவு பிணைந்துள்ளது என்ற அர்த்தத்தையே கொடுக்கிறது.

தென்பகுதி அரசியல்வாதிகள் இக்கால கட்டத்தில், கடந்த பதினைந்து ஆண்டுகளாக விடப்பட்ட அரசியல் தவறுகள் பற்றிய விமர்சனப் பார்வையுடன் மிதவாதிகளாகவும் அறிவுபூர்வமாகவும் நடந்து கொள்ளவேண்டிய நேரம் வந்துவிட்டது

(அ-எ]

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ யாழ்ப்பாணம் சென் லூட்ஸ் அணி எதிர் ஊரெழு றோயல் அணி

★ சுன்னாகம் ஜொலி போய்ஸ் அணி எதிர் ஊரெழு றோயல் அணி.

o o o

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் நடத்தும் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை சுன்னாகம் சிங்க மாப்பாணர் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபெற்றும் கழக அணிகள் வருமாறு:

பிற்பகல் 3.00 மணி:- உடுவில் சென் மேரிஸ் வி. க. எதிர் சுழிபுரம் ச[illegible]

மாலை 4 மணி:- பன்னாலை கணேசன் வி. க. எதிர் யாழ். திருநகர் பாரதி வி. க.

o o o

அரியாலை சனசமூக நிலையம் நடத்தி வரும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபெற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ மாலை 4 மணி;- ஜக்ஸன் அணி எதிர் விக்கினேஸ்வரா அணி.

★ மாலை 5 மணி:- அளவெட்டி யுத் "ஏ" அணி எதிர் கிறீன்கிங்ஸ் அணி.

o o o

யாழ். ஆஸ்பத்திரி வீதி ஐங்கரன் விளையாட்டுக் கழகம், கழக மைதானத்தில் நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் மத்[illegible] தொர்தேன் வி. க வெள்ளை அணி மோதும்.

# 'நகர' வந்து திரும்பியது

யாழ்ப்பாணம், மே 12

திருகோணமலையில் இருந்து காங்கேசன் துறைக்கு நேற்றுக் காலை வந்து சேர்ந்த "நகர" கப்பல் பயணிகளை இறக்கிவிட்டு உடனே திருகோணமலைக்குத் திரும்பியது.

தற்போது லீவில வந்து யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும்—திருகோணமலையில் மாகாணசபையில் பணியாற்றும் - அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை இக்கப்பலில் அழைத்துச் செல்ல ஏற்பாடு எதுவும் செய்யப்படாததால் கப்பல் உடனடியாகத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது

மேற்படி அரச ஊழியர்கள் தாம் வேலைக்குத் திரும்ப வசதியாக— இக் கப்பலில் திருமலை செல்வதற்கு—ஒழுங்கு செய்து தருமாறு கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபருக்கு, யாழ் மேலதிக அரச அதிபர் மூலம் தகவல் அனுப்பியிருந்தனர் எனினும் நேற்று மாலைவரை கொழும்பிலிருந்து இது குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது

## பொருளாதார..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரிகளுடன் ஆலோசனை நடத்திவிட்டு நான்கு அல்லது ஐந்து தினங்களில் முடிவு கூறுவதாக அப்போது ஜனாதிபதி உறுதியளித்தார்

பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கினால் தமிழ் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை உண்டாக்கலாம் என்று தாம் ஜனாதிபதியிடம் கூறியபோது—

தடையை முற்றாகவே நீக்கிவிடவேண்டுமா? என்று ஜனாதிபதி அக்கறையுடன் வினவியதாக திரு ஜோசப் பி பிஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக எவ்வித விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள 827 தமிழ் இளைஞர்களில் 30 சதவீதமானோர் எவ்வித குற்றமும் செய்யாதவர்கள் என்றும் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்க வேண்டும் என்றும் —

அதற்கு முன்னோடியாக 2் அல்லது ்0 தமிழ் இளைஞர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும என்றும் — தாம் ஜனாதிபதியிடம் கேட்டதாக திரு ஜோசப் மேலும் தெரிவித்தார். (அ-எ-3)

## அப்பள தொழிற்சாலை

சனசக்தி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் ஒவ்வொரு தொழில் முயற்சியை ஆரம்பிக்கும் திட்டத்தில், வடமேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வட்டு கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அப்பளம் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜேதுங்காவின் இடத்துக்கு எம்.பியாக கராலியத்த

கொழும்பு, மே 12

ஜனாதிபதி விஜேதுங்கா நாடாளுமன்றத்தில் வகித்த உறுப்பினர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் செனவிரத்னா பண்டா கராலியத்த நியமிக்கப்படுவார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்டச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா இத்தகவலை வெளியிட்டார்.

1988 நாடாளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களில் திரு. விஜேதுங்காவுக்கு அடுத்த படியாக அதிக வாக்குகள் பெற்றிருந்த திரு. சின்னசாமி ராஜு அண்மையில் இறந்து விட்டார் என்றும்—

அதனால் அவருக்கு அடுத்ததாகக் கூடுதல் வாக்குகள் பெற்ற திரு. கராலியத்தாவே புதிய எம். பியாக நியமிக்கப் படுவார் என்றும் திரு. அத்தநாயக்கா கூறினார்.

திரு. கராலியத்த பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 18 ஆயிரத்து 633 ஆகும். (உ-எ)

## புதியவர் நியமனம்

கொழும்பு, மே 12

ஜனாதிபதி விஜேதுங்காவின் பத்திரிகைச் செயலாளராக திரு. ஹரோல்ட் பீரிஸ் நியமிக்கப்பட்டார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் கீழ் பத்திரிகைச் செயலாளராகப்பணியாற்றிய திரு. இவான்ஸ் கூரே வெளிநாட்டமைச்சுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டார். (உ-எ)

# அரசியல் தீர்வுக்கு நடவடிக்கை புலிகளுடன் பேச புதிய முயற்சி

## ஜனாதிபதி டி. பி. பேட்டி

கொழும்பு, மே 12

இந்நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாக உள்ளவற்றில், வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே ஜனாதிபதி என்ற வகையில் முன்னுரிமை கொடுப்பேன்.

பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வுக்கே நான் நடவடிக்கை எடுக்கப்போகிறேன்.

இவ்வாறு புதிய ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா "திவயின" ஞாயிறு இதழுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு போர் நடத்தித் தீர்வு காணப் போகிறீர்களா அல்லது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப் போகிறீர்களா என்று செய்தியாளர் கேட்ட போதே அவர்—

பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வுக்கே தாம் நடவடிக்கை எடுக்கப் போவதாக வலியுறுத்திக் கூறினார்.

இதே வேளை ஜனாதிபதி "சண்டே ஐலண்ட்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவர நான் புதிய முயற்சியை மேற்கொள்வேன்.

வடபகுதியில் தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபடுபவர்களிடமிருந்து ஆயுதங்களைக் களையும் பொறுப்பையும் முறையான சிவில் நிர்வாகம் ஒன்றின் கீழ் அப்பகுதியை மீண்டும் கொண்டு வரும் பொறுப்பையும் ஆயுதப்படையினர் பூரணமாக நிறைவேற்றுவார்கள்.

பிரேமதாசா கொலைக்கு விடுதலைப் புலிகள் தான் காரணம் என்பதை நிரூபிக்கும் சாட்சியம் ஏதும் இல்லை.

பொலீஸ் விசாரணையின் சில அம்சங்களை பொதுசன தொடர்பு சாதனங்கள் பிழையான முறையில் வெளியிட்டுவிட்டன. இதுவரை பொலீஸார் விடுதலைப் புலிகள் மீது சாத்தியமான சந்தேகம் இருப்பதாக மட்டுமே கூறியுள்ளனர். பத்திரிகைகள் இதனை பெரிது படுத்தியுள்ளன. விசாரணை முடிவடையும் வரை கொலைக்கான நோக்கம் குறித்து நாம் ஊகம் தெரிவிக்கமுடியாது — என்று கூறினார். [அ-எ-6]

## புதிய திட்டம் தருவாராம்

நாம் ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கு வரக் கூடியதாக அந்த வகையில் அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் புதிய அதிகாரப் பரவலாக்கல் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிப்போம்—

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா "சண்டே ஐலண்ட்" பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். [ |-எ]

## விசாரணை நடக்குமுன்னரே

# பிரேமா பலியான இடம் துப்புரவு செய்யப்பட்டது

கொழும்பு, மே 12

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலை பற்றி விசாரணை நடத்த, குண்டுத்தாக்குதல் நடந்த இடத்துக்குச் சென்ற ஸ்கொட்லண்ட் யார்ட் துப்பறியும் நிபுணர் குழு, அந்த இடம் துப்புரவு செய்யப்பட்டிருந்ததை கண்டு ஏமாற்றமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட ஆமர்வீதிச் சந்தியில் காணப்பட்ட மனிதஉறுப்புகள், சேதமடைந்த பொருள்கள் மற்றும் இரத்தக்கறை ஆகியவற்றை, அதிகாரிகள் சிலமணித்தியாலங்களில் அகற்றியதுடன் தண்ணீர் பவுஸர்களைக் கொண்டு வந்து வீதியையும் கழுவிவிட்டனர்.

இதனால் கொலைச்சம்பவம் தொடர்பான தடயங்களை ஸ்கொட்லண்ட்யார்ட் குழுவினரால் கண்டுபிடிக்க முடியாமற் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சில மணித்தியாலங்களில் பிரேமதாசா கொலையுண்ட பகுதியால் வாகனப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பமாகியது

குண்டுத்தாக்குதல் நடக்கும் இடத்தை உடனடியாகத் துப்புரவு செய்துவிடும் கொள்கையை கொழும்பு மாநகரில் அரசு அதிகாரிகள் கடைப்பிடித்து வருகின்றனர். அதற்கு இணங்கவே மேதினத்தன்றும் அரசு அதிகாரிகள் நடந்து கொண்டனர்.

கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ மீது தாக்குதல் நடத்தப்பட்ட போதும் இவ்வாறே அரசு அதிகாரிகள் அந்த இடத்தைத் துப்புரவு செய்துவிட்டனர்.

குண்டு வெடித்த இடங்களில் ஏற்பட்ட அழிவுகளை மக்கள் பார்த்து, ஆத்திரமடைந்து வன்செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவே அரசு இந்த முறையைக் கடைப்பிடித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# தொப்பிகல காட்டில் மீண்டும் ராணுவ முகாம்

கொழும்பு, மே 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தொப்பிகலைக் காட்டுப் பகுதியில் மீண்டும் இராணுவ முகாம் ஒன்றை படையினர் அமைத்துள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று தெரிவித்தது.

டிராக்டர்களில் தங்களுக்குரிய உணவுப் பொருள்களை ஏற்றிச்சென்ற படையினர், பெரும் பரப்பளவிலான முகாம் ஒன்றை அமைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

ஒருவருடத்துக்கு முன்னர் அப்பகுதியில் முகாம் அமைக்கப்பட்டதும் —

விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் அந்த முகாமை பின்னர் மூடி அங்கிருந்து வெளியேறினர் என்பதும் தெரிந்தவையே —

ஐந்நூறுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் தற்போது அந்த முகாமில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

தொப்பிகலை காட்டுப் பகுதியில் முகாம் அமைத்தாலும், புலிகள் அங்கு விடாது தாக்குதல்களை நடத்தி வருவதால் அங்கு தொடர்ந்து படையினர் தங்கியிருக்க முடியாத நிலையே ஏற்படும் என்று கடந்தவாரம் இராணுவ உயர் அதிகாரிகள் கருதது தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது (உ-3)

# கரை ஒதுங்கிய 3 சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

யாழ்ப்பாணம், மே 12

இளாலிக் கடற் பிராந்தியத்தில் கடந்தவாரம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அழுகிய நிலையில் கரை ஒதுங்கிய நான்கு சடலங்களில் மூன்று அடையாளம் காணப்பட்டன.

சடலங்களாகக் கரை ஒதுங்கிய மூவரும் இளாலிக் கடலில் படகோட்டும் தொழில் செய்து வந்தவர்கள் என்றும் —

சம்பவ தினம் அவர்களது படகுகளை ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்கி அழித்த போது அவர்கள் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவு தட்டுவன் கொட்டியில் இருந்து இடம் பெயர்ந்து குஞ்சுப் பரந்தனில் வசித்து வந்த நல்லதம்பி இரத்தினம் (வயது 47), அவரது மகன் மனோகரன் (வயது 24) சுந்தரலிங்கம் பஞ்சலிங்கம் (வயது 21 ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

கடந்த புதனன்று கச்சாய் கரையில் ஒதுங்கிய இவர்களின் சடலங்கள் அப்பகுதியிலேயே புதைக்கப்பட்டன பின்னர் அவர்களின் உறவினர்கள் சடலங்களை நேற்று முன்தினம் புதைத்த இடத்திலிருந்து எடுத்து தகனம் செய்தனர்.

கரை ஒதுங்கிய நாலாவது சடலம் பருத்தித்துறையைச் சேர்ந்த படகோட்டி ஒருவருடையதாக இருக்கலாம் எனக் கருதப்பட்டது (உ-15)

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 12

நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்வி இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளிலேயே நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் [illegible] எடுத்து வரப்படும் என்று [illegible] தகவல் கிடைத்தது. (உ-3)

## சர்ச்சைக்குரிய

# அந்த பொலீஸ் அதிகாரி பீதியினால் தலைமறைவு?

கொழும்பு, மே 12

அத்துலத் முதலியின் கொலையைத் தொடர்ந்து களுத்துறைப் பொலீஸ் பயிற்சிக் கல்லூரிக்கு இடம்மாற்றம் செய்யப்பட்ட கிரிலப்பனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரேமலால்ரணகல கொல்லப்பட்டு விட்டார் என்ற செய்தி கடந்தவாரம் கொழும்பில் பரவியது.

இது பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்ள கொழும்பில் உள்ள செய்தியாளர்கள் களுத்துறை பொலீஸ் பயிற்சிக் கல்லூரியுடன் தொடர்பு கொண்டனர் என்றும்—

அப்போது சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரி வெளியே சென்று விட்டார் என்றும், எப்போது அவர் திரும்புவார் என்று கூறமுடியாதிருப்பதாகவும் பயிற்சி நிலைய அதிகாரிகள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்களாம்.

உயிருக்கு அஞ்சியே இன்ஸ்பெக்டர் ரணகல தலைமறைவாகி விட்டார் என்று பொலீஸ் வட்டாரங்கள் கூறின

லலித் அத்துலத் முதலி கிருலப்பனை பொதுக்கூட்டத்தில் வைத்து கொல்லப்பட்ட சமயம் கிருலப்பனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த மேற்படி அதிகாரி—

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரின் வாய்மூல உத்தரவுப் படி தான் லலித்தின் கூட்டத்துக்கு பாதுகாப்பு வழங்கவில்லை என பொலீஸ் விசாரணையின் போது குறிப்பிட்டிருந்தார் என்பது தெரிந்ததே. [உ-எ]

யாழ். இந்து மகளிர் கல்லூரி

பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

இடம்: யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபம்
காலம்: 13 - 05 - 93 மாலை 3 - 30 மணி
விடயம்: பொன்விழா தொடர்பான நிகழ்ச்சிகள் தயாரித்தல்.

பழைய மாணவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வி புஷ்பா செல்வநாயகம்.
தலைவர்.
(25626)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசமணி விமலராசா

(முன்னாள் குடும்பநலசேவையாளர், வளலாய், அச்சுவேலி)

வளலாயினை பிறப்பிடமாகக் கொண்ட இராசமணி 11-5-93 இல் காலமானார். அன்னார் விமலராசாவின் அன்பு மனைவியும், பிரணவனின் அன்புத் தாயாருமாவார். இறுதிக் கிரியைகள் இன்று 12-5-93 காலை .0-00 மணியளவில் அச்சுவேலி தெற்கில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விமலராசா (கணவர்)
அச்சுவேலி தெற்கு.
(25630)

## இளையதம்பி சுந்தரலிங்கம்

தாவடியைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சுந்தரலிங்கம் 08 05-93 இல் கொழும்பில் காலமானார். அவரது ஈமக்கிரியைகள் 09-05-93 இல் கொழும்பில் நடைபெற்றன.

அன்னார் நீலாம்பிகையின் அன்புக் கணவரும், செந்தூரன், சிகிலன், வாசுகி, பிரதீபா ஆகியோரின் தந்தையும், இரத்தினபூபதி, சண்முகலிங்கம், பத்மாவதி, பரமேஸ்வரி, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், புவனேஸ்வரி, ஞானேஸ்வரி, காலஞ்சென்ற அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி நீ. சுந்தரலிங்கம் (மனைவி)
நத்தாவில் லேன்,
தாவடி,
கொக்குவில்.
(6170)

## திருமதி நடராசா மனோன்மணி

தாவடி தெற்கைச் சேர்ந்த திருமதி நடராசா மனோன்மணி காலமானார். அன்னார் நடராசாவின் (வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை தலைமைச் செயலகம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சீனியர் கந்தையா, காலஞ்சென்ற திருமதி கந்தையா பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், சசிகலா, சசீந்திரன் கொக்குவில் இந்துக் கல்லூரி, பிரதீபன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஆகியோரின் தாயாரும், ஆறுமுகதாஸ் டாக்டர், கனடா), அருமைத்துரை [ஓய்வூதியர் சுகாதாரத் திணைக்களம்) ஆகியோரின் சகோதரியும், சிறுப்பிட்டி வடக்கு காலஞ்சென்ற நாகமுத்து செல்லத்துரை, திருமதி செல்லத்துரை அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், பத்மராணி (கனடா), லீலாவதி, மகேஸ்வரி, மனோன்மணி, லீலாவதி, முத்துத்தம்பி, பத்மராணி ஆகியோரின் மைத்துனியுமாவார் இறுதிக் கிரியைகள் அன்னாரின் தாவடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (12-5-93) புதன்கிழமை காலை 10 மணிக்கு தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. நடராசா (கணவன்)
முருகமூர்த்தி கோவிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(25622)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெடினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12 - 05 - 1993 இல் [illegible] வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org